**<u>சார்பு நீதிமன்றம், செஞ்சி</u>**

**அ.வ.எண். 95/2017** **நாள்.10.06.2024**

2024-ம் ஆண்டு ஜுன் திங்கள் 10ம் நாள் வாதி தரப்பு **1ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வடிவேல் | தொழில் | |
| த.பெ/க.பெ. | நடேச கவுண்டர் | சாதி | |
| கிராமம் | சின்னநொளம்பை | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 65 |

**<u>வா.சா.1</u>**

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் குறித்து தாவாவில் கூறவில்லை என்றால் சரிதான். எனது தரப்பில் குறியீடு செய்துள்ள வா.சா.ஆ-25 ஆவணத்தில் 1ம் பிரதிவாதி ராஜமாணிக்கத்தின் பெயருக்கு வழங்கப்பட்ட அடங்கல் என்றால் சரிதான். வா.சா.ஆ.26 ஆவணத்தில் உள்ள சொத்து உங்கள் தாவாவில் கூறப்படாத சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ-27 மற்றும் வா.சா.ஆ-28 ஆவணங்களில் கூறப்பட்டுள்ள சொத்துக்களும் வழக்கில் கூறப்படாத சொத்துக்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ-29 கிரைய பத்திரம் மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தும் வழக்கில் கூறப்படாத சொத்து என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் அனைத்தும் வழக்கில் கூறப்படாத சொத்துக்கள் சம்மந்தப்பட்டவை எனவே மேற்படி ஆவணங்கள் ஏற்றுகொள்ளக்கூடிய ஆவணங்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனவே, நீங்கள் பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளதால் உங்கள் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியவை என்றால் சரியல்ல.